## 4. கவன ஈர்ப்பு

### சென்னை நகரில் வெறி நாய்கள் தொல்லைகளைத் தடுக்க நடவடிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எஸ்.எஸ். ராமசுப்பு, குமரி அனந்தன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

**திரு. எஸ். எஸ். ராமசுப்பு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை நகரில் பல இடங்களில் வெறி நாய்கள் அதிகரித்து, பொதுமக்களுக்குத் தொல்லை விளைவித்து வருவதைத் தடுக்க வேண்டியது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :—

அறிக்கை.

எல்லா தெருநாய்களும் வெறிநாய்கள்தான் என்று சொல்வதற்கு இல்லை. வெறிநாய் என்று தீர்மானமாகச் சொல்வதற்கு இறந்த நாயின் மூளையைப் பரிசோதித்து அது வெறிநாய்தான் என்று கண்டுபிடிக்க முடியும். வெறிநாய்க் கடியினால் உண்டாகும் நோயைத் (Rabies) தடுப்பதற்கு தெருநாய்களைப் பிடித்து அழிப்பது ஒரு முறையாகும் அல்லது எல்லா நாய்களுக்கும் தடுப்பூசி போடுவது மற்றொரு முறையாகும். நாய் கடித்ததற்காக தடுப்பூசி போட்டுக்கொள்வதற்கு சென்னை அரசுப் பொது மருத்துவ மனையில் தகுந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவ்வப்போது தடுப்பூசிகள் போடப்பட்டு வருகின்றன. கடிபட்ட எல்லா நபர்களுக்கும் போதுமான மருத்துவ வசதி செய்து தரப்படுகிறது. சென்னை மாநகராட்சி நாய் பிடிப்பதை தீவிரப்படுத்துவதற்காக இரண்டு சேசிஸ் 1989 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ரூ. 3.5 இலட்சத்தில் பெறப்பட்டு நாய் பிடிப்பதற்கு தகுந்தாற்போல் வடிவமைக்கப்பட்டு 20—1—1990 அன்று நலத்துறையினால் ஒரு வண்டி பெறப்பட்டது. மற்றொன்று இம்மாத இறுதிக்குள் வடிவமைக்கப்பட்டு அனுப்பப்படும் என்று தெரியவருகிறது. சமீபத்தில் வெறிநாய் கடித்து சிலர் காயமடைந்தனர் என்று செய்தித்தாள் மூலமாக தெரியவந்தது. மறுநாள் காலை நாய்வண்டியை அனுப்பி அந்தப் பகுதியைச் சுற்றிலும் 38 நாய்கள் பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன.

*1990 சனவரி 23]* *[திரு. கோ. சி. மணி]*

சென்னை மாநகராட்சியைப் பொறுத்தமட்டில் வெறிநாய் கடித்து காயப்படுத்துவதையும் நாய்கள் தெருவில் சுற்றி அலைவதையும் கட்டுப்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. எஸ். எஸ். ராமசுப்பு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் அதுவும் முக்கியமாக தென் சென்னைப் பகுதிகளில் திருவல்லிக்கேணி, ஆழ்வார்பேட்டை, மயிலாப்பூர் போன்ற பகுதிகளில் எல்லாம் இப்போது ஒரு சில மாதங்களாக வெறிநாய்களுடைய தொல்லை அதிகரித்துள்ளது. இதனால் பல பள்ளி மாணவர்கள், அலுவலகத்திற்குச் செல்பவர்கள் அந்த நாயினால் கடிக்கப்பட்டு ராயப்பேட்டை ஆஸ்பத்திரியில் நூற்றுக்கணக்கான பேர் சேர்க்கப்பட்டுள்ளதாக பத்திரிகைகளிலே வந்திருக்கின்றது. சென்னை மாநகரில் கொஞ்ச நாட்களாக நாய்கள் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விளக்கம் மட்டும் கேட்க வேண்டும்.

**திரு. எஸ். எஸ். ராமசுப்பு:** தொல்லை அதிகரித்து இருப்பதைத் தடுப்பதற்கு நகராட்சி எந்தவிதமான நடவடிக்கையும் சில நாட்களாக எடுக்காமல், அந்த நாய்களைப் பிடிப்பதற்கும் எடுக்கப்படவில்லை என்று சொல்லப்படுகின்றது. இதனாலே அந்த நாய்களுடைய தொல்லையினால் 'ராபீஸ்' என்ற நோய் வருகின்றது. அது கொடுமையான நோய், அது உயிரைக் கொல்லக்கூடிய நோய், அது பிறரைப் பாதிக்கக்கூடிய நோயாக இருப்பதால், இதற்கு உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த நாய்களைப் பிடிக்கவேண்டும். அதற்கு என்ன நடவடிக்கை எடுத்திருக்கின்றீர்கள்? 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' இல் கூட . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது வெறி நாய்களை என்ன செய்யவேண்டும் என்கிறீர்கள்? *(சிரிப்பு)*

**திரு. எஸ். எஸ். ராமசுப்பு:** அந்த நாய்களைப் பிடித்து அழிப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கின்றது என்பதைக் கேட்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெருவில் நடமாடுகிற நாய் எல்லாம் வெறிநாய் என்று சொல்லமுடியாது. காரணம் அது வெறிநாய் என்று குறிப்பிடுவதற்கு அதைச் சாகடித்து அதன் மூளையை எடுத்துப் பரிசோதித்த பிறகுதான் வெறிநாயா, நல்ல நாயா என்று தெரியும் என்று அறிவிக்கிறார்கள். ஆனால் ஒன்றை

முக்கியமாக நாம் கருதவேண்டும். நகர்ப்புறமானாலும் கிராமப்புறங்களானாலும் கூட, நாய்களினுடைய நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த வேண்டியது மிக அவசியம்.

11–15 மணி.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போலவும் இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்ததின் அடிப்படையிலேயும், இந்தப் பிரச்சினைகள், நாய்க்கடி ஏற்பட்டது என்பது உண்மை. ஆனால் மாநகராட்சியைப் பொறுத்த வரையில் ஒரு நாளைக்கு 60 முதல் 70 நாய்கள் தெருக்களில் பிடிக்கப்பட்டு கொல்லப்படுகின்றன. சென்ற ஆண்டு மட்டும், 1989 டிசம்பர் முடிய, 14,868 நாய்கள் பிடிக்கப்பட்டிருக்கின்றன. இதுவரை 2 வாகனங்கள் நாய் பிடிப்பதற்காக உலவ விடப்பட்டிருக்கின்றன. மீண்டும் ஒரு வாகனம் தயாரிக்கப்பட்டு இந்த மாதமோ அல்லது அடுத்த மாதமோ, அந்த வாகனமும் இந்தப் பணியில் ஈடுபடும் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசினுடைய கருத்தும், மாநகராட்சிகள், நகராட்சிகளுடைய கருத்தும் நடமாடுகின்ற நாய்களைக் கட்டுப்படுத்தவும், வெறிநாய்களாக இருந்தால் உடனடியாகக் கொல்லவும், நாய்களுக்கு உரிமம் வழங்குவதற்குக் கூட நல்ல பரிசோதனைக்குப் பிறகுதான் உரிமம் வழங்கப்படவேண்டுமென்ற ஆணை விரைவில் பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு.

திரு. சா. பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989–90 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் பதினொன்று முதல் பதினேழு வரையிலான அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு.

திரு. சா. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின், 1989–90 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவினுடைய பதினாறு முதல் பத்தொன்பது வரையிலான அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.